# கேம்பிறிஜ் கலாசாலை

## நவிண்டில்

## பதிவு இல ~ 12195

~ ஆசிரியர் செல்நெறி கையேடு ~

# கேம்பிறிஜ் கலாசாலை – நவிண்டில்

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஆசிரியர்களுக்கு.....

இது உங்களின் கல்வி நிறுவனம். இந்நிறுவனத்தின் வெற்றிகள் அனைத்துமே உங்களால் உருவாக்கப்பட்டவையே! கலாசாலையினை மேன்மேலும் விரிவுபடுத்தும் நோக்கிலான சில செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவீகளென மனப்பூர்வமாக நம்புகிறேன்.

01. எமது கலாசாலை ஆசிரியர்கள் அநாவசியமான வகையில் லீவு எடுப்பதில்லை என்பதையிட்டு பெருமிதமடைகிறேன். எனினும் ஆசிரியர்களுக்கு திடீர் வசதியீனங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் லீவு தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. அத்தகைய தருணங்களில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் தளம்பல் ஏற்படாதிருக்க மாற்று நடவடிக்கையினை நிர்வாகம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எமது நிறுவனத்தில் அதிகமான ஆசிரியர்கள் கற்பித்துவருஞ்சூழலில் சில நாட்களில் ஐந்து அல்லது ஆறு ஆசிரியர்கள் லீவு எடுக்கும் பட்சத்தில் கற்றல் - கற்பித்தலில் இடர்பாடுகள் நிகழ்வதால் பெருஞ்சிரமத்தினை எதிர்கொள்கிறோம். எனவே மாற்றொழுங்கு நிமித்தம் ஆறு ஆசிரியர்களை நியமித்துள்ளோம். அவர்களுக்கான சம்பளத்தினையும் வழங்குகின்றோம். பதில் ஆசிரியரை உடனடியாக ஒழுங்கு செய்து லீவு எடுப்பது நடைமுறையில் சிரமம் மிகுந்த செயற்பாடாகும். எனவே அவ்வொழுங்கினை நிர்வாகமே மேற்கொள்ள உள்ளது. நியம ஒழுங்கினைப் பேண மேலும் இரு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். பதில் ஒழுங்கு நிமித்தமாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்குவதில் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றேன். இவர்களுக்கான சம்பளப்பணத்தினை வழங்க நீங்கள் உதவி புரிவீர்கள் என நம்புகிறேன். தங்களின் மாதச்சம்பளத்தில் ஒரு நாள் சம்பளத்தினை மாற்றொழுங்கு ஊதியமாக எதிர்பார்க்கிறேன்.

குறிப்பு :- மாணவர்களின் நலனில் கொள்ளும் அக்கறையே நிறுவனத்தின் நன்மதிப்பினை உச்சத்திற்கு எடுத்துச் செல்லும் குறிகாட்டியாகும். ஒன்று அல்லது இரண்டு நாட்கள் லீவு எடுப்பதற்கே -எங்களால் பதில் ஆசிரியரை ஒழுங்கு செய்து உதவ முடியும். எனவே பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய

வேண்டிய கடமையினைக் கருத்திலே கொண்டு லீவு எண்ணிக்கையினை இயன்றவரை குறைப்பது மாணவர்களின் கற்றலுக்கு உறுதுணையாக அமையும்.

02. அலகு வினாக்களைத் தெரிவு செய்யும் போது முழுமையான பாடப்பரப்பினையும் கருத்திலே கொள்வது சாலச்சிறந்தது. அலகு வினாக்கள் பகுதி – I, பகுதி – II என்ற வகையில் குறுவினாக்கள், அமைப்பு வினாக்கள், கட்டுரை வினாக்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக உருவாக்கப்படுதலே ஏற்புடையதாகும்.

03. அலகுப்பரீட்சை முடிந்த தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் பாடவிடைத்தாள்கள் திருத்தப்பட்டு புள்ளிகளைப் பதிய நிர்வாகத்திடம் ஒப்படைப்பது விரும்பத்தக்கது. நிர்வாக உறுப்பினர்கள் தமது பதிவேட்டிலே புள்ளிகளை உரியமுறையிலே பதிவு செய்த பிறகு மீளவும் உங்களிடம் ஒப்படைப்பார்கள். அவ்விடைத்தாள்களை மாணவர்களிடம் கொடுத்து பெற்றோரிடம் கையெழுத்துப்பெற்று வருமாறு அறிவுறுத்தி, பெற்றோரிடம் கையெழுத்துப் பெற்று வந்தபின் உறுதிப்படுத்திக் கொள்ளவும். பெற்றோரிடம் காட்டி உறுதிப்படுத்தாத மாணவர்களை காரியாலயத்திற்கு அனுப்பி உதவுதல் விரும்பத்தக்கது.

04. பாடவேளையின் போது மாணவர்கள் பயிற்சிக் கொப்பிகளை ஒழுங்கின்றி வைத்திருத்தல் பாடக்குறிப்பு எழுதாதிருத்தல், வீட்டு வேலைகளை செய்து வராதிருத்தல், சக மாணவருக்கு இடையூறாக அமைதல், கற்பித்தலோடு தொடர்பற்ற விடயங்களை உரையாடுதல் போன்ற பண்புகள் மாணவர் மத்தியில் இனங்காணப்பட்டால் சம்பந்தப்பட்ட மாணவரை உடனடியகவே நிர்வாகத்திடம் அனுப்பி வைக்கவும். நாம் பெற்றோருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கையினை மேற்கொள்வோம்.

05. கலாசாலையின் இறுதிப்பாடத்தினைத் தொடர்ந்து முதலாவது மணி அடித்ததும் பெண் பிள்ளைகள், பெற்றோரால் அழைத்துச் செல்லப்படும் மாணவர்கள், வான், ஓட்டோ ஆகிய வாகனங்களில் செல்லும் மாணவர்கள் மட்டும் வகுப்பறையை விட்டு வெளியேறுவர். இரண்டாவது மணி ஒலித்த பின்பே ஏனைய மாணவர்கள் வெளியேறுவர். எனவே இறுதிப்பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர் வகுப்பறையில் நின்று அவர்களை ஒழுங்குபடுத்தி உதவுதல் சாலச்சிறந்ததாகும்.

06. கலாசாலை நிறைவுற்று மாணவர்கள் வீடு செல்லும் போது, அவர்களிடம் ஒழுங்கீனங்கள் தென்பட்டால் அச்சுறுத்தி வீதி ஒழுக்கத்தினையும், மாணவப்பண்பினையும் பேண உதவி புரியவும். அனைத்து ஆசிரியர்களும் தம்மைக் கண்காணிக்கிறார்கள் என்ற எண்ணம் மாணவர்களிடம் ஏற்படுமாயின் அவர்களின் ஒழுக்கப்பண்பு மேம்பாடு அடையும் வாய்ப்பு அதிகரிக்கும். எனவே மாணவர்களிடம் ஒழுங்கீனங்களை அவதானித்தால் நிர்வாகத்திடம் தெரியப்படுத்தி உதவுதல் ஏற்புடைய நடைமுறையாகும்.

07. கார்த்திகை மாதம் மாணவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்படுவது அனைவரும் அறிந்ததே. எனவே கார்த்திகை மாதம் மாணவர்களிடமிருந்து பெறப்படும் சம்பளப்பணம் அனைத்து ஆசிரியர்களுக்கும் பகிர்ந்து வழங்கப்படும்.

08. நிறுவனத்தில் வறிய மாணவர்கள், ஆசிரியர்களின் பிள்ளைகள் போன்றோருக்கு இலவசமாகக் கற்பிக்கப்படுவதால் மாணவர்களிடமிருந்து 80% பணமே சேவை நிதியாகக் கிடைக்கிறது.

09. பாட அலகுகளை ஒக்ரோபர் மாதத்திற்கு முன்னர் முழுமையாக முடித்து தொடர்ந்து வரும் நாட்களில் மீட்டல் வினாக்களைச் செய்து உதவவும்.

10. தற்புதுமையான கற்பித்தல் முறை, நவீன தொடர்பாடல் சாதன உபயோகக்கற்பித்தல், கையேடு வழங்கல், மாறுபட்ட பயிற்சிகள், விநோதமான பின்னூட்டல் போன்ற வழிமுறைகளைக் கையாள விரும்பின் தயக்கமின்றி நிர்வாகியோடு கலந்தாலோசிக்கலாம். ஆசிரியர்களின் நுட்பமான அறிவுசார்ந்த புதுமை நாட்டங்களுக்கும் கலாசாலை பூரண ஒத்துழைப்பினை நல்கும்.

11. அலகு விடைகளில் பெற்றோரின் கையொப்பத்தினை பதிவு செய்து வராத மாணவர்களையும், அலகுத்தேர்வில் 80 புள்ளிகளுக்கு குறைவாகப் பெற்ற மாணவர்களையும் காரியாலயத்திற்கு அனுப்பி உதவவும். பெற்றோரை அழைத்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள ஒத்துழைப்பாக அமையும்.

12. ஒவ்வொரு ஆசிரியரும் வகுப்பறைக்குள் சென்றவுடன் முதல் நாள் வருகை தராத மாணவர்களை விசாரித்து நடவடிக்கை எடுப்பது சாலச்சிறந்தது. ஆசிரியர்களும் மாணவர் வருகையிலே அக்கறையோடு இருப்பதனை மாணவர்கள் உணர்ந்து கொள்வார்கள் எனில் கற்பித்தல் மேம்படும். முதல் நாள் கற்பித்த வியடத்திற்கான வேலைத் திட்டங்களையும், குறிப்புகளை

ஒழுங்காக வைத்திருக்கிறார்களா? என்பதையும் பார்வையிட்டு குறைகள் இருப்பின் நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தவும்.

13. உரிய நேரத்திற்கு அனைத்து ஆசிரியர்களும் வகுப்பறைக்கு செல்லும் போதுதான், கற்பித்தலில் தளம்பலின்றி வகுப்பறையின் சமனிலையினைக் பேண முடியும். எனவே வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு 5 நிமிடம் முன்னராகவே வருகை தருவது விரும்புத்தக்கது.

14. வகுப்பறையினுள் நிகழும் சிறு பிரச்சினையினைக் கூட மாணவர்கள் வீட்டுக்குக் கொண்டு செல்கின்றனர். எனவே மாணவர்களின் இடையில் நிகழும் தொடர்புகள் ஆரோக்கியமான முறையில் இடம்பெறுவதை உறுதிப்படுத்தி, தேவையற்ற விடயங்களில் ஈடுபடாதிருக்குமாறு எச்சரிக்கை செய்து கற்பித்தலினை மேற்கொள்ளுவும். அனைத்து மாணவர் மீதும் உன்னிப்பான பார்வையினை வைத்திருந்து சிறு தவறு செய்தாலும் நிர்வாகியிடம் அனுப்பினால் அமைதியான சூழலில் கற்பித்தலை மேற்கொள்ளலாம்.

15. குறித்த பாடம் கற்பிக்கும் போது, அவ் அலகுக்கான வினாக்கள் மாணவர்களிடம் இருக்குமென பெற்றோருக்கு உறுதியளித்துள்ளோம். எனவே அலகு வினாக்களை உரிய முறையிலே வைத்திருக்கிறார்களா என்பதனை கவனிக்கவும்.

16. அலகுவினாக்கள், தவணைத்தேர்வு வினாக்கள் எனப்வற்றை வழங்கும் போது, Type செய்து Photo Copy எடுக்கத் தேவைப்படும் கால அவகாசத்தினைக் கருத்திலே கொள்ளவும். மின்வெட்டினை மனதிற்கொண்டு முற்கூட்டியே அலகு வினாத்தாள், தவணைத் தேர்வு வினாத்தாள் என்பவற்றைத் தந்து உதவுமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

17. தவணைத் தேர்வு விடைத்தாள்களை மாணவர்களிடம் கொடுத்து திருத்துவதனைத் தவிர்த்துக் கொள்ளவும். விடைத்தாள்களினைப் பரிசீலித்த பெற்றோரால் விமர்சனங்கள் முன்வைக்கப்படாத வகையில் ஆசிரியர்களே துல்லியமாகத் திருத்துவது விரும்பத்தக்கது.

18. அலகு வினாக்கள் தொடர்பான பரீட்சைகள் சனி, ஞாயிறு தினங்களில் 2.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. அந்நாட்களில் வருகை தரும் ஆசிரியர்கள்

அனைவரும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குவது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

19. வகுப்பறையில் ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களுக்கு கட்டுப்படாத மாணவர்களை இனங்காணில் அவர்களை உடனடியாகவே காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கவும். அத்தகைய மாணவர்களின் பெற்றோருடன் தொடர்பு கொண்டு அவர்களை நல்வழிப்படுத்த உறுதுணையாக அமையும்.

20. பாடத்திட்டங்கள் முடிக்கப்படாத சந்தர்ப்பத்தில் போயா விடுமுறை நாளிலும் ஏனைய தவணை விடுமுறை நாட்களிலும் வகுப்புகள் ஆரம்பிக்க 1 மணித்தியாலம் முன்னராக மேலதிக வகுப்புகளை நடத்தி பாடத்திட்டத்தினை முடிக்க உதவுதல் வரவேற்கத்தக்கதாகும்.

21. மாணவர்களை சுய கட்டுப்பாட்டில் வைத்திருந்து தேவையான நற்பழக்க வழக்கங்களையும், அறிவுரைகளையும் தினமும் போதித்து மாணவர்கள் நற்பிரஜைகளாக உதவுங்கள்.

22. ஆசிரியர் கற்பிக்கும் தருணத்தில் நிர்வாகியாகிய நான் வகுப்பறைக்குள் நுழைவதை ஒரு போதும் விரும்புவதில்லை. எனினும் மாணவர்களின் சிக்கலான சில செயற்பாடுகளே அத்தகைய சூழலினை உருவாக்குகின்றன அனைத்து ஒழுங்குகளும் சிறப்பாக நிகழ்ந்தால் வகுப்பறை நோக்கிய என்னுடைய வருகை அவசியமற்றதாகிவிடும்.

23. இந்துக்களின் விசேட தினங்களாகிய தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, தீபாவளி, சூரன்போர், மார்கழி இறுதி ஞாயிறு, வல்லிபுரக் கோயில் தேர், தீர்த்தத்திருவிழா, சந்நிதி முருகன் தேர், தீர்த்தத்திருவிழா போன்ற நாட்களில் கலாசாலை நடைபெறமாட்டாது. சித்திராப் பௌர்ணமி, ஆடி அமாவாசை என்பன சனி, ஞாயிறு தினங்களில் வந்தமைந்தாலும் வகுப்புகள் நடைபெறமாட்டாது. எனின் வார நாட்களில் சித்திராப் பௌர்ணமி, ஆடி அமாவாசை என்பன வந்தால் பி.ப 3.45 மணிக்கு வழமைபோலவே வகுப்புகள் நடைபெறும். யா/தாமோதரா வித்தியாலயத்தின் விளையாட்டுப் போட்டி, பரிசில் தினம் என்பவற்றிற்கும் எமது கலாசாலை விடுமுறையைக் கடைப்பிடிக்கிறது.

24. மாணவர்கள் தோடு தவிர்ந்த ஆபரணங்களை அணிதல், தேவைக்கு அதிகமான பணத்தை வைத்திருத்தல், பாடத்தோடு சம்பந்தமற்ற பொருள்களைக் கொண்டுவருதல், பெண்கள் உதட்டுச்சாயம், நகப்பூச்சு, இமையலங்காரஞ் செய்தீருத்தல் போன்ற பண்புகளை அவதானித்தால் அவர்களை காரியாலயத்திற்கு அனுப்பி உதவினால் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுகூலமாக அமையும்.

25. மாணவர்கள் யாரையேனும் கலாசாலைக்கு வெளியே சமூகத்திற்கு ஒவ்வாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அறிந்தால் நிர்வாகத்திடம் தெரியப்படுத்தி உதவுங்கள். நல்லதொரு சமூகத்தை உருவாக்க வேண்டுமென்ற கலாசாலையின் குறிக்கோளுக்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பே முதன்மையானது.

26. அலகு வினாக்கள் வழங்கப்பட்ட பிறகு, மாணவர்களின் சந்தேகங்களை முழுமையாக நிவர்த்தி செய்து, வாய்மொழியாகக் குறிப்பிட்ட வினாக்களை மாணவர்களிடம் கேட்பது சிறந்த செயற்பாடாகும். அலகுப் பரீட்சையில் அதிக புள்ளியினைப் பெறவும் ஊக்குவிப்பாக அமையும்.

27. வகுப்பறையில் மாணவர்களின் பயிற்சிக் கொப்பி திருத்தும் போது கவனிக்கப்பட வேண்டியது :-

மாணவர்களின் இருக்கை இடத்திற்கு ஆசிரியர் சென்று திருத்துவது விரும்பத்தக்கது. ஏனெனில் ஒரே நேரத்தில் பல மாணவர்கள் ஒன்று கூடி நிற்கும் போது ஏனைய மாணவர்களின் தேவையற்ற செயற்பாடுகள் வகுப்பறையில் அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கும். இவற்றைத் தவிர்க்கும் முகமாக மேலதிக பயிற்சிகளை வழங்கி கொப்பிகளைத் திருத்துவது சாலச்சிறந்தது.

28. மாணவர்களுக்கு வழங்கப்படும் வீட்டு வேலைகளை ஒவ்வொரு மாணவர்களும் செய்கிறார்களா? என்று அவதானித்து, அக்கறையின்மையோடு வீட்டு வேலைகளை செய்யாதுவரும் மாணவர்களை காரியாலயத்திற்கு அனுப்பி உதவவும். நாம் உடகடியாகவே பெற்றோருக்கு மாணவரின் செயற்பாடுகளை எடுத்துக்கூறி அவர்களிடம் முன்னேற்றத்தை ஏற்படுத்த முனைவோம்.

29. எம்து கலாசாலைக்கு வடமராட்சியில் பல பாகங்களில் இருந்தும் மாணவர்கள் வருகின்றனர். எமது கலாசாலையின் நன்மதிப்பும், நம்பிக்கையும்,

ஒழுக்கமும், திருப்தியான செயற்பாடுகளும் பெற்றோர்களைக் கவர்ந்துள்ளன. இதனால் அதிக செலவு செய்து பிள்ளைகளை அனுப்புகின்றனர். கல்விக்காகவும் போக்குவரத்துக்காகவும் பணத்தையும், பிள்ளைகளின் கற்றலுக்காக தங்களது நேரத்தையும் செலவிடுகின்றனர். எனவே அவர்களது எதிர்பார்ப்புக்களை நாம் நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளோம்.

30. எமது கலாசாலையில் தவணைப் பரீட்சைகள் வலய மட்டப் பரீட்சைகள் ஆரம்பிப்பதற்கு 20 நாட்கள் முன்னதாக நடைபெறும். எனவே பரீட்சையினைக் கருத்திலே கொண்டு குறித்த தவணைக்குரிய பாடத்திட்டத்தினை பூர்த்தி செய்து உதவுவது ஆசிரியர்களின் கடமையாகும்.

அன்பார்ந்த ஆசிரியர்களே! உங்கள் கலாசாலையின் வளர்ச்சிக்கு மேலே கூறப்பட்ட அனைத்து விடயங்களிலும் மேன்மையான ஒத்துழைப்பினை வழங்குங்கள். இது உங்களின் நிறுவனம். உங்களின் சேவையினால் உச்ச நிலை அடைந்து வருகின்றது. உங்கள் ஒத்துழைப்பு 100% ஆக இருக்கும் பட்சத்தில் மேலும் நன்மதிப்பினைப் பெற்று வளர்ச்சி காணும். பேற்றோருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற பூரண ஒத்துழைப்பு நல்குங்கள். எமது பிரதேசத்தில் ஒழுக்கம், கல்வி ஆகிய இரண்டிலும் மேன்மை பெற்றுள்ளது. மென்மேலும் சிறப்படைய பரிபூரண ஒத்துழைப்பை நல்குங்கள்.

*~ நிர்வாகி ~*